**செ. கு. எண்: 060** **நாள்: 24.04.2018**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் அறிக்கை</u>** – <u>24.4.2018</u>

அஸ்ஸாம் மாநிலம்–இடுலி மற்றும் கபாங் இடையேயான பகுதியில், இந்திய நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது, 20–வது மதராஸ் ரெஜிமெண்டில் ஹவில்தாராக பணிபுரிந்த, திரு. ஆர். செல்வகுமார் அவர்கள் 22.4.2018 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆர். செல்வகுமார் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ஹவில்தார் திரு. ஆர். செல்வகுமார் அவர்களின் குடும்பத்தாருக்கு இருபது லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**